HMOP. No.58/2020

சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள் – 26.09.2025

ம.சா.1– அபர்ணாராணி த/பெ – ரெங்கராஜன்

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி–</u>**

**1)** நான் பி.இ., எம்.இ படித்துள்ளேன். நான் திருமணத்திற்கு முன்பு விருதுநகர் காமராஜர் பொறியியல் கல்லூரியில் பி.இ படித்துள்ளேன். எதிர்மனுதாரர் பி.டெக் படித்துள்ளார். திருமணத்திற்கு பின்னர் அமெரிக்காவில் எம்.பி.ஏ படித்தேன். எங்கள் திருமண செலவில் 1/10 பங்கு எதிர்மனுதாரர் தகப்பனார் கொடுத்ததாக முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதன் படி திருமணத்திற்கு ரூ.50 லட்சம் செலவு செய்தோம் என்றால் சரிதான். நான் பொருளாதார ரீதியாக இதுபோல் எதிர்மனுதாரரை துன்புறுத்தினேன் என்றால் சரியல்ல. திருமணத்தின் போது நான் வேலை பார்க்கவில்லை. எங்களுக்கு அமெரிக்காவில் வைத்து குழந்தை பிறந்தது. நான் விருப்பப்பட்டு எனது குழந்தையை அமெரிக்காவில் வைத்து பெற்றெடுத்தேன்.

**2)** குழந்தையை அமெரிக்காவில் வைத்து பெற்று எடுத்தால் குடியுரிமை பிரச்சனை வரும் என எனக்கும், எதிர்மனுதாரருக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் மறுத்ததை மீறி தான் நான் அமெரிக்காவில் குழந்தையை பெற்று எடுத்தேன் என்றால் சரியல்ல. திருமணத்திற்கு பின்னர் தாலி மாற்றும் நிகழ்ச்சி திருச்செந்தூரில் வைத்து நடந்தது. எதிர்மனுதாரர் தாயாருக்கு சுமார் 70 வயது இருக்கும் என்றால் சரிதான். அவருக்கு தீவிர இறைபக்தி உள்ளது

என்றால் சரிதான். தாலி மாற்றும் வரை எனது கழுத்தில் தாலி அணிய கூடாது என எதிர்மனுதாரின் தாயார் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் அமெரிக்கா சென்று வந்த பின் கழுத்தில் தாலி அணியவில்லை என்றும், அதை பார்த்து எதிர்மனுதாரின் தாயார் எனது கழுத்தில் தாலி அணிந்து கொள்ளுமாறு சத்தம் போட்டார் என்றால் சரியல்ல, எதிர்மனுதாரின் சகோதரி தாலி அணிவதில்லை என்றும் அது போல் என்னையும் தாலி அணிந்துகொள்ளவேண்டாம் என கூறினார்.

**3)** எதிர்மனுதாரின் சகோதரி எப்போதும் தாலி அணிந்திருப்பார் என்றும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதார் என் மீது சிவகாசி சார்பு நீதிமன்றத்தில் HMOP.No.304/2018 வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் அதன் விபரம் அப்போது எனக்கு தெரியாது, அமெரிக்கா சென்ற பின்னர் எதிர்மனுதாரர் என்னிடம் சொன்னார். மேற்படி வழக்கில் அறிவிப்பு பெற்றுக்கொள்ளக்கூடாது என்பதற்காக அமெரிக்கா சென்றேன் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்த பின்னர் பெரியவர்கள் மூலம் எதிர்மனுதாரிடம் பேசினோம் என்றால் சரியல்ல, அமெரிக்காவில் உள்ள எதிர்மனுதாரர் சகோதரி எங்களை அழைத்து பேசினார். மேற்படி விபரங்களை மனு மற்றும் முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

**4)** முதல் விசாரணையில் எனக்கும், எதிர்மனுதாருக்கும் பொதுவான நண்பர்கள் மூலம் பேசியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அப்போது நான் எதிர்மனுதாரரை மனரீதியாக துன்புறுத்த மாட்டேன் என கூறியதால் எதிர்மனுதாரர் மேற்படி வழக்கை திரும்ப பெற்றார் என்றால்

சரியல்ல, நான் அவ்வாறு எதுவும் துன்புறுத்தவில்லை. HMOP.No.304/2018 வழக்கில் என்ன கூறியிருந்தாலும் நானும், எதிர்மனுதாரும் சேர்ந்துவிட்டதால் அதை நான் மன்னித்து விட்டதாக எடுத்துக்கொள்ளலாம் என முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், அந்த அர்த்தத்தில் நான் கூறவில்லை.

(எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).